ISSN - 2362 - 0536

# PROCEEDINGS

## International Conference on Contemporary Management (ICCM) - 2014

"Empowering People Towards Sustainable Development"

Volume - II

Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka
14th & 15th, March 2014

# PROCEEDINGS

## International Conference
## on
## Contemporary Management (ICCM) - 2014

**"Empowering People Towards Sustainable Development"**

Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka

14th & 15th, March 2014

International Conference on Contemporary Management (ICCM) - 2014

© 2014 Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka.

URL : www.jfn.ac.lk / macos / ICCM - 2014

e-mail : iccmuj@gmail.com

T.P : 0094 (0)21 222 3610

Printers : Harikanan Printers,
#681, K.K.S Road, Jaffna, Sri Lanka.

ISSN: 2362-0536

**Disclaimer :**

Responsibilities for the content of the full papers included in the publication remain with these respective authors.

# இலங்கைத் தலபுராணங்கள் புலப்படுத்தும் கிராமியப் பண்பாட்டு மரபுகள்.

சி. சுகந்தினி

## ஆய்வுச்சுருக்கம்

இலங்கையில் தோன்றிய தலபுராணங்கள் கிராமிய பண்பாட்டின் பல்வேறு அம்சங்களையும் புலப்படுத்துகின்ற சமய மற்றும் பக்தி இலக்கியங்களாக விளங்குகின்றன. இலங்கைத் தலபுராணங்கள் புலப்படுததும் கிராமிய பண்பாட்டு மரபுகள் பற்றி இதுவரை எந்தவித ஆய்வுகளும் வெளிவராத நிலையில் இலங்கையில் காணப்படும் கிராமிய பண்பாட்டுக் கோலங்களை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகின்றது. அத்துடன் தலபுராணங்கள் புலப்படுத்தும் கிராமிய பண்பாட்டு மரபுகள் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப சில மாற்றங்களை உள்வாங்கியிருப்பதும் இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகின்றது.

**திறவுச்சொற்கள் :** தலபுராணங்கள், மரபு, கிராமியப்பண்பாடு, வழிபாடு.

### அறிமுகம்.

இலங்கையில் கிராமியப் பண்பாட்டை வளம்படுத்தி வரும் பண்பாட்டு மூலங்களுள் இலங்கைத் தலபுராணங்கள் தனித்துவமுடையனவாக விளங்குகின்றன. தலபுராணம் என்பவை மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய கோயிற் பண்பாட்டு அம்சங்களை சிறப்பாகப் புலப்படுத்தும் இந்துப்பண்பாட்டு இலக்கியங்களாக விளங்குகின்ற போதும் அவை கிராமிய பண்பாட்டின் பல்வேறு அம்சங்களையும் வெளிப்படுத்துகின்ற கருவூலங்களாக விளங்குகின்றன.

இந்தவகையில் இலங்கைத் தலபுராணங்களில் ஆகமம் சார்ந்த வழிபாட்டு மரபுகள் மட்டுமன்றி ஆகமமரபிற்கு புறம்பான கிராமிய வழிபாட்டு முறைகளும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### ஆய்வின் நோக்கம்.

இலங்கைத் தலபுராணங்கள் புலப்படுத்தும் கிராமியப் பண்பாட்டுக் கூறுகளை வெளிக்கொண்டு வருவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இருப்பினும் தலபுராணங்கள் புலப்படுத்தும் கிராமியப் பண்பாட்டு மரபுகள் தற்காலத்தில் மாற்றம் பெற்று விளங்குவதையும் இவ்வாய்வுக் கட்டுரையில் ஆராயப்படும்.

### ஆய்வின் எல்லை.

இவ்வாய்வானது கி.பி 14ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தை எல்லையாகக் கொண்டு அமைகின்றது. இக்காலப் பகுதிக்குள் தோன்றிய சிவாலயங்கள் மீதெழுந்த தலபுராணங்களே இவ்வாய்வின் மூலங்களாக அமைகின்றன.

### ஆய்வு முறையியல்.

இவ்வாய்வுக்கான பல விபரங்கள் கள ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்படும். விபரண முறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வு முறைகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப் படுகின்றது.

### மரபு ஒரு விளக்கம்.

"மரபு" என்னும் சொல் குணம், பழமை, முறைமை, வமிசம், இயல்பு, இலக்கணம், பெருமை, மேம்பாடு, நியாயம் என்னும் பல பொருளுடையது. மரபு தொன்று தொட்டு இருந்து வருவது. இது

முதுநிலை விரிவுரையாளர், தரம்-1, இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ssrimuralitharan@yahoo.com.

நேற்று - இன்று நாளை என்று நோக்கப்படும் சிறப்புடைய தமிழ்ச் சொல்லாகும் எந்தப்பொருளை எந்தச் சொல்லால் எந்த வழியில் அறிவுடையோர் சொன்னார்களோ அந்தப் பொருளை அந்தச் சொல்லால் அந்தவழியிற் சொல்லுதலே மரபு ஆகும்.

கெடுங்காலம் என்று ஒன்று வந்து விடின் கெடுப்பார் இல்லாமலேயே கேடு விளையும் என்னும் சோதிட நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடையே இருப்பதை

**ஶ்ரீகைலாஸநாத புராணம்.**

"கெடுங்கால முன் வந்துற்றிடின் கெடுப்பாரி லையறி நீ.."[4]

என்னும் பாடல் விளக்குகின்றது.

கடவுள் நீதி அறத்திற்கு மாறானவர்களை அழித்து விடும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது. குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்ட ஐயனார் கோயிலை ஒல்லாந்தர் இடித்து கடற்கோட்டை ஒன்றை கட்டினார்கள் ஆனால் கடவுள் நீதி அவர்களை தண்டித்ததனால் அவர்கள் ஆங்கிலேயரிடம் தோற்றுத் தாம் பிடித்த இடங்களை விட்டு தமது ஊருக்கு விரைந்து சென்றுவிட்டனர் என்பதனை,

"...யையக் கட்டினர் பார்விட்டு நீங்கினர்

தெய்வ நீதி செகுத்திடு மென்பரால்"[5]

என்னும் ஈழத்துச்சிதம்பர புராணப் பாடல் புலப்படுத்துகின்றது.

பொருள்வரவு, மழைவரவு, விருந்து வரவு, கலகவரவு, துக்கவரவு, அச்சவரவு முதலியவற்றைக் காக்கைகள் கரைந்து முன்னரே அறிவிக்கும் என்பது கிராமப்புற நம்பிக்கைகளில் ஒன்றாகும். காலையில் காரைநாட்டு மகளிர் விரும்பி வரவேற்கும் விருந்தின் வரவை காக்கைகள் கூறும் என்பதனை மேல்வரும் ஈழத்துச்சிதம்பர புராணச் செய்யுள் மூலம் அறியமுடிகிறது.

"விருந்து வரும் வருமென்று வேம்பிருந்த கருங் காக்கை

மருந்து நிகர் மடவார்க்கு வரவுரைக்கு மலர்ச் சோலை"[6]

வரப்போகும் ஆபத்தை முன்னே அறியும் ஆற்றல் மிருகங்களுக்கு இருப்பதாக மக்களிடையே நம்பிக்கை நிலவுகின்றது. இதில் மனிதரால் பார்க்கப்படும் சகுணங்களில் மிக முக்கியமானது பல்லி சகுணம் ஆகும். பல்லி சொற் பலனைப் பார்த்துக் காரியங்கள் ஆற்றியமையை தலபுராணங்களில் கண்டு கொள்ளமுடிகிறது. இதனை,

"....சிந்தனை செய்து செவ்வி

கனித்திடத் தேங்காய் கொண்டு

வந்தனை செய்த போது

பல்லியும் வழங்கிற் றோர் சொல்

சொற்பொருள் பார்த்த போழ்து

தொலை வென வுணர்ந்து மன்னன்.."[7]

என்னும் பாடல் மன்னன், பல்லி சொற் பலனைப்பார்த்த போது கேடு என்று இருந்ததால் நற்காரியத்தை ஆற்றாது விட்டதாக உரைத்துள்ளது.

மனம் தூய்மையாக இருந்தால் வாழ்வு சிறந்தாக அமையும் என்பது கிராமப்புற மக்களது நம்பிக்கையாகும். தலபுராண பாடல் ஒன்றிலே தினகர முனிவர் அழுக்காறு இல்லாது நல்ல மனம் உள்ளவராதலால் அவர் நட்டமரம் எட்டுதிசையிலும் விழுதுகளை விட்டு பரந்து நிற்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை

"....திவ்விய மாக வோங்கித்

திசையெலாம் பரந்து நிற்கும்

அவ்விய மகன்றார் நாட்டும்

பாதவ மழியாக தென்பர்"[8]

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன.

தக்கன் வேள்வியின் போது யாக அக்கினி மௌனமாக உள்ளடங்கி இடஞ் சுழிந்தமையை,

தக்கன் வேள்வியின் போது யாக அக்கினி மௌனமாக உள்ளடங்கி இடஞ்சுழிந் தமையை,

"மவுன மாயுள்ளடங்கி மழுங்கியே யிடஞ் சுரித்த"[9]

என்னும் சகுண நம்பிக்கையின் மூலம் இது ஒரு அமங்கல நிகழ்ச்சியாக ஆசிரியர் காட்டியுள்ளார்.

**கிராமியக் கலைகள்.**

கிராமியக் கலைகள் வழிபாட்டுச் சடங்குகளின் ஒரு பகுதியாகவும் அழகுணர்ச்சி

யின் வெளிப்பாடாகவும், பொழுது போக்காக வும் மக்களால் நடாத்தப்படுகின்றவையாகவும் விளங்குகின்றன.

இசைவாத்தியங்களின் ஒலியில் வேலை செய்தால் எந்தவித சோர்வும் இல்லா மல் பெண்கள் வேலை செய்த கிராமிய வாழ்வினை தலபுராணங்களில் கண்டுகொள்ள முடிகின்றது. உழவர்கள் ஒன்றிணைந்து மருதப்பறை - தண்ணுமை போன்ற இசைக் கருவிகள் கொண்டு ஒலியெழுப்பி இசை மிளிற்றுவதால் சோர்வு நீங்கி உழத்தியப் பெண்கள் வயல்களுக்குச் செல்வதனை தட்சிணகைலாச புராணத்தில் "பரந்த வாய்க் கிணை தண்ணுமை பற்பல

"நிரந்த மள்ளர் நெருக்க முழங்கலா
வரந்தை போய தின்றா மெனவார்த்தவர்ப்
புரந்த மங்கையராங் கெதிர் போயினார்"[10]

என வருதல் மூலம் அறிய முடிகின்றது.

கிராமப்புற கட்டடக்கலை மரபில் மாடங்களையுடைய பெரிய வீடுகளும், திண்ணைகளும் முக்கியமாக இடம்பெறும். இது தலபுராணங்களில்,

"மாடமா மனைக டோறும்".[11]

எனவும்,

"திண்ணைகடோறும் வைகித்".[12]

எனவும்,

வருவதாலறியலாம். இவ்வகையான மாடங்கள், திண்ணைகள் தோறும் அக் காலத்தில் சைவம் வளர்க்கப்பட்டது என்ப தனையும் அறியமுடிகிறது.

வழிபாட்டுச்சடங்குகளில் ஒரு பகுதி யாக காவடி, பாற்குடம் ஏந்துதல் போன்ற கலைகள் இடம்பெற்றுள்ளதனை தலபுராணங் களின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் ஆதிரைவிழாவின் போது ஆண்கள் காவடி ஆடிக்கொண்டுவர பெண்கள் பாற்குடத்தை ஏந்தி தமது நேர்த்தி களை சிறப்பாக செய்வார்கள் என்பதனை,

"துய்ய நேர்த்தியிற் றோளிற் காவடி
தொண்ட ராடவே மற்றவர்
மையின் வாள் விழிக் காதன் மங்கையர்
மாசி லன்னையர் சென்னி மேற்
கையிற் பாற்குடங் கொண்டு காதலாய்க்
கடன்கழிப்பவர் பற்பலர்.[13]

என்னும் தலபுராணப்பாடல் புலப் படுத்துகின்றது. அத்துடன் இவை கிராமிய வழிபாட்டில் நேர்த்திக்கடனைச் செலுத்தும் கலைவடிவங்களாக விளங்குவது தெரிய வருகின்றது.

கிராமியப் பண்பாட்டில் அரசன் வீதியுலா வரும் போது சங்கு, தாரை, சல்லரி, தக்கை, முரசு, கொம்பு, பேரி முதலான கிராமிய வாத்தியக்கருவிகள் இசைக்கப்படுதல் திரிகோணாசலப்புராணத்தில்,

"சங்கொடு தாரை சின்னம்
சல்லரி நிசாளம் தக்கை
பொங்கிடி முரசு கொம்பு
பேரியற் பேரி காலம்
வங்கியம் திமிலை பம்பை
மன்னு பல்லியங்கள் ஆர்ப்ப....."[14]

என வருகின்றது.

இவ்வகையான பண்டைய சிறப்புக் களுடன் அரசன் தலைநகரை வலம்வந்ததாக கூறுவதனூடாக சமூக விழாக்களில் கிராமியக் கலைகளின் வகிபாகத்தினைத் தலபுராணங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கிராமிய மக்களால் பேசப்படுகின்ற வாய்மொழிச் சொற்கள் தலபுராணங்களில் பிரதிபலிக்கின்றன. யாழ்ப்பாணத்துத் தமிழ் வழக்கில் பௌர்ணமி என்பதனை "பறுவம்" என்றே கூறுவர். தேவர்களை கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் பௌர்ணமி தினத்தில் மாலைக் காலத்தில் வணங்கும்படி கூறும்போது, தலம் பற்றிய நாட்டார் வழக்கிலுள்ள கதைகளை எல்லாம் வகுத்து இலக்கிய நயத்துடன் அமைத்துக் கொள்வது தலபுராணச்சிறப்பாகும்.

"தேங்கு கார்த்திகை யாமாதஞ் செறிதரு கார்த் திகைக்கன்
னோங்கிய பறுவம் பற்ற யுயர் தினஞ் சிவமே சத்தி.."[15]

கிராமங்களில் வாழுகின்ற முதியோர் பழைய கதைகளை கூறுவது வழக்கம். இதனை ஈழத்து சிதம்பர புராணம்

"அகவையின் முதிர்ந்த வான்றோ
ரகங்களின் மடத்தில் வைகித்
தகைபெறு தலத்துப் பண்டைச்
சரிதைகள் சான்றோர் காதை...."[16]

தலபுராணங்களில் ஆன்றோர் வாக்குகளும் பதிவாகியுள்ளன. பாடல் பெற்ற தலமாகிய கேதீச்சரம் காடு மூடிக்கிடப்பதைக் கண்ணுற்ற நாவலர் அதனை புனருத்தாரனம் செய்வதற்கு விரும்புகிறார். மக்கள் ஒவ்வொருவரும் விருப்பம் கொண்டால் "சிறு துளி பெரு வெள்ளமாகும்" என்ற கிராமிய வழக்கினை,

"....விருப்புவைத்தா
னூறிய துளிக ளொன்றா யொரு பெரு வெள்ள மன்றோ"[17]

எனும் பாடல் மூலம் அறியலாம்.

**கிராமிய வழிபாடு.**

இலங்கையில் வாழும் சைவ மக்களிடத்தில் தொன்று தொட்டு இருவகையான வழிபாட்டு மரபுகள் இருந்து வருகின்றன. ஒன்று ஆகமமுறையில் அமைந்த பெருந் தெய்வ வழிபாட்டு முறை மற்றையது ஆகமமரபுக்கு புறம்பான கிராமிய வழிபாட்டு முறையாகும். இவற்றுள் கிராமிய வழிபாட்டு மரபுகள் தனித்துவமிக்க பல்வேறுபட்ட வழிபாட்டு மரபுகளை கொண்டனவாக காணப்படுகின்றன. எனினும் இன்றைய கிராமியப் பண்பாட்டில் ஆகமபண்பாட்டு மரபுகள் கலந்து ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிக்கமுடியாத நிலைப்பாட்டை அவதானிக்க முடிகிறது.

ஈழத்துச்சிதம்பரத்தைச் சுற்றி அரசடி சிவஞானவைரவரும், தினகரன்பிட்டி வைரவ சுவாமியும், காளியம்மை திருக்கோயிலும் இருந்துள்ளமை பற்றியும், அத்தெய்வங்களுக்கு பொங்கல் திருவிழா நிகழ்வது பற்றியும் ஈழத்துச்சிதம்பர புராணம் குறிப்பிடுகின்றது.

வேட்டைத்திருவிழாவின் உட்பொருள் தத்துவத்தினை எடுத்துக்கூறி ஐயனார் ஏழாவது விழாநாளில் வேட்டையாடும் திருக்கோலத்தை கண்ணினால் காண்பது தவப்பயன் என்பது ஈழத்துச்சிதம்பர புராணத்தில்,

"அன்னலரு ளையனா ரவ்வேழாம் விழாநாளின்
மன்னுலகும் விண்ணுலகும் வாழ்த்தெடுக்க மணிவீதி
நண்ணியுலாப் போத்தந்து நல்வேட்டை யாடுவார்
கண்ணிலவர் திருக்கோலங் கண்டார் தல் பெரும் பேறே"[18]

என வருதலால் அறிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கை நாட்டிலே பரவிய "வைசூரி" நோயைத் தணித்தற்கு முத்துத் தாண்டவ முதலியார் மணற்காடு என்னும் இடத்தில் ஒரு முத்துமாரியம்மை கோயிலை ஒருமாதத்தில் கட்டுவித்ததாகவும், அதன் பின் வேள்வி, பூசை என்பன ஒழுங்காக செய்ததினால் நோய் தணிந்தது என்பதனை ஈழத்துச் சிதம்பர புராணம் மேல்வருமாறு கூறுகின்றது.

"வந்தமாரி யம்மை பிணி மாற முத்துத்
தாண்டவனார் மணற்கா டென்னும்
நந்துவயல் சூழ்பதியின் நன்முத்து
மாரியம்மை நயந்து வைகச்"[19]

வறுமை, நோய், வெப்பு நோய் முதலியன வருத்தும் காலங்களில் வைரவக் கடவுளுக்கும், ஐயனாருக்கும் நேர்த்திகள் செய்து பொங்கலும், பூசையும் புரிவதனை ஈழத்துச்சிதம்பர புராணம்,

"அடியவ ருவா ரன்பர் மற்றுளார்
மிடிபிணி வெப்புநோய் மிகுந்த நாள்களில்
விடிவுறு நேர்த்திகள் விளம்பிப் பொங்கலுங்
கடிமலர்ப் பூசையுங் கவினச் செய்வரால்"[20]

என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறான நேர்த்திகள் செய்து வழிபடும் போது நோய்கள் நீங்கும் என்பது கிராமிய மக்களின் நம்பிக்கைகள் ஆகும்.

வீரகுடியில் பிறந்தவர்கள் ஐயனாரையும், வைரவக்கடவுளையும் தமது குலதெய்வமாக வழிபடுவது மரபு. அம்மரபில் வந்த ஆண்டிமுனிவரும் அரசின் கீழே ஐயனாரையும், வைரவரையும் வைத்து வழிபடுவதினால் கிராமிய மரபு மேலும் சிறப்படைகின்றது என்பதனை ஈழத்துச்சிதம்பர புராணம் மேல்வரும் செய்யுள் மூலம் விளக்குகின்றது.

"ஆண்டியார் பழங்குடிப் பிறந்தா ரையனைக்
காண்டகு சூலத்துக் கடவுள் தம்மையே
மாண்டகு தெய்வமாய் வணங்கி வந்தமை
வேண்டிவ ரன்பினால் விளக்க மெய்துமே"[21]

வழிபாடுகளில் பின்பற்றப்படுகின்ற கோயில் வழக்கங்கள் தலபுராணங்களில் இடம்பெறுகின்றன. சிறப்பாக ஈழத்துச் சிதம்பர புராணம் தூயதான உரல், உலக்கை களால் குத்தியெடுக்கப்பட்ட கைக்குத் தரிசியையே திருவமுதுக்கு ஏற்றதாக விரும்பி யெடுப்பார் என்பதனை பின்வரும் செய்யு ளால் அறியமுடிகின்றது.

"....கருவியென வந்துள்ள வெந்திரங்கள்
குத்தரிசி கருதார் தூய
உரலுலக்கை யாலமைந்த கைக்குத்தே
திருவமுதுக் குவந்து கொள்வார்".[22]

மேலும், சுவாமிக்கு சாற்றுவதற்கு சுத்தமான உரலிலே துவைத்த எள்ளினைப் பிளிந்து எடுத்த சுத்தமான எண்ணெயே பயன்படுத்தப்படும் என்பதனை,

"தூய வுரல் தணிற்று வைத்த வெள்ளினுறு
தூநெய்யே சுவாமிக் காகும்.."[23]

என்ற பாடலடிகள் என்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆனால் சமகாலத்தில் உரலுக்கு பதிலாக இயந்திரத்திரத்தின் பாவனையே அதிகமாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகவுள்ளது.

**கிராமிய விளையாட்டுக்கள்.**

கிரமப்புறமக்களின் நாகரிகத் தோடும், பண்பாட்டோடும் விளையாட்டுக் கள் இணைந்துள்ளன. இவை சமுதாயத்தை யும், அச்சமுதாய உறுப்பினர்களாக இருக் கின்ற மக்களுடைய பல்வேறு மனப்பிரதி பலிப்புக்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றாகிய தயிர்முட்டி அடித்தலும் காரை நகரில் இடம்பெற்றதை ஈழத்துச் சிதம்பர புராணம் விளக்குகின்றது. சித்திரை என்னும் புத்தாண்டில் முதல் மாதம் வந்ததும் சிறந்ததாக அமைய வேண்டும் என இறை வனை வேண்டி இவ்விளையாட்டைச் செய்வ தாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இதனை,

"...அத்தனை யாயர் கொழுந்தினை மாயனை யாராத
பத்திபி லேத்துநர் பாறயிர் முட்டி யுடைப்பாரே"[24]

என்னும் பாடல் வரி புலப்படுத்து கின்றது.

வீர உணர்ச்சியைத்தூண்டும் கிராமிய விளையாட்டுக்களில் குளக்கோட்ட மன்னன் ஈடுபட்டதை திரிகோணசலபுராணம்,

"முள்ளுடைத் தால் செஞ்சூட்டு
முனிவின் வாரனப் போர்விட்டும்
புள்ளிய குறும்பூ தம்மில் போர்
செய்யப் பொருந்திவிட்டு
நள்ளிருள் களபம் ஒன்றோடு
ஒன்று அமர் நாட விட்டு
எள்ளரும் தகர்கள் தம்மின்
எதிர்த்து இகல் இயற்றல் விட்டும்".[25]

என்று கூறுகின்றது. இதன் மூலம் காலில் முள்போன்ற கூர்கத்தி கட்டிய சேவல் களை சண்டைக்கு விட்டுப்பார்த்தல், யானை களை முட்டிமோத விடுதல், ஆட்டுக்கிடாக் களை சண்டைக்கு விடுதல் போன்ற வீரவிளை யாட்டுக்கள் இடம்பெற்றுள்ளதை அறியமுடி கின்றது.

திருக்கரைசைப்புராணம் இலங்கைப் பதியில் வாழும் ஆடவர்களின் இயல்பு பற்றிக் கூறுகின்றபோது விற்போரினால் அருச் சுனனை ஒப்பார்கள் என்றும், வாற்போரினால் அபிமன்யுவை ஒப்பார்கள் என்றும் கூறுகின் றது. இதனை,

"உருத்த செஞ்சிலைத் தொழிலினிற் பார்த்தனை யொப்பார்
கரித்த வெஞ்சுடர் வாளினை லபிமனைக் கடுப்பார்"[26]

என்பதன் மூலம் தலபுராண ஆசிரியர் களது சிந்தனைகளில் கிராமியப்பண்பாட்டின் தாக்கத்தை நோக்கமுடிகின்றது.

**கிராமியத் தொழில்கள்.**

தலபுராணங்கள் உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் காண லாம். நகுலகிரிப்புராணம் உழவுத் தொழிலின் முறைமையை விளக்கும் போது, உழவர்கள் இந்திரனாகிய தெய்வத்தை வணங்கி குவித்து வைக்கப்பட்ட நெற்போர்களைப் பிரித்து எடுத்து செலுத்தப்படுகின்ற எருதுகளைக் கொண்டு நன்றாக மிதித்த பின்பு அந்த வைக்கோலை உதறி வேறாக எறிந்தனர். (நகுலகிரிப் புராணம்,திருநாட்டுப்படலம்.24) என்று குறிப்பிடுகின்றது.

கிராமங்களில் விவசாயத்தில் ஈடுபடு பவர் பயிர்களைப் பயிரிடுகின்ற முறைமை

எவ்வகையில் அமையும் என்பதை நகுலகிரிப் புராணம் விளக்குகின்றது.

"...மல்லல் சேர் முதிரையொண் மாடமாகிய
பல்வகை யுறும் பயிர் பனை தொ றுற்றவே "[27]

வீட்டிலே புதிய நெல் வந்து சேர்ந்த பின் முன்பு வீட்டில் இருந்த வளப்பம் பொருந்திய கொள்ளு, எள்ளு, உழுந்து முதலிய பல வகைப்பட்ட சிறுதானியங்கள் பயிர்களாவதற்காக வயல்களுக்கு வந்தடைகின்றன என்பதனை அறியமுடிகின்றது.

திரிகோணாசல புராணம் எருதுகளும், எருமை மாடுகளும் சோடிசோடியாக ஏரில் பூட்டி வயலில் உழுவதற்கு பயன்படுத்தியமையை,

"ஏற்று இனத்துடன் பகட்டினை
இணங்குற இசைந்தே
ஊற்றிருந்திடு வயலின்
ஏர் பூட்டினர் உழுது அங்கு..."[28]

என வர்ணிக்கின்றது.

ஈழத்துச்சிதம்பரபுராணம் இயந்திரக் கலப்பையையும், எருது பூட்டிய கலப்பையையும் உழுவதற்கு பயன்படுத்தியமையை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"எந்திரக் கலப்பைய நெருதின் மேழியர் "[29].

எருதுகளைக் கொண்டு உழவுத தொழில் மேற்கொள்ளுகின்ற முறையிலிருந்து உழவு இயந்திரத்தின் மூலம் வயலைப் பதப்படுத்தி உழுகின்ற அறிவியல் வளர்ச்சி சமகாலத்தில் முனைப்புபெறுகின்றது.

**கிராமிய மருத்துவம்.**

கிராமப்புறமக்கள் அன்றாடம் தம் வாழ்வில் கையாளும் மருத்துவ முறைகள் கிராமிய மருத்துவம் என்று கூறப்படும்.

வெப்பமான காலங்களில் குளிர்ச்சியான உணவு உண்ணவேண்டியதன் முக்கியத்துவத்தினை ஈழத்துச்சிதம்பர புராணம்,

"வெம்மையால் வழியெலா மெலிந்து வந்தவர்க்
கம்மை நே ராவின மளித்த மோரினைச்"[30]..

என்று கூறுகின்றது. இதன் மூலம் வெய்யில் வெப்பத்தால் வழிமுழுவதும் நடந்து மெலிந்து வந்தவர்களுக்கு பாலினின்று பெற்ற மோர் உணவை கொடுத்தார்கள் என்பதனை அறியமுடிகின்றது.

**நிறைவுரை.**

இவ்வாறாக கிராமிய பண்பாட்டுக் கூறுகளான கிராமியவழிபாடு, கிராமியக்கலைகள், கிராமியத்தொழில்கள், கிராமிய நம்பிக்கைகள், கிராமிய விளையாட்டுக்கள் போன்ற பண்பாட்டுக் கூறுகள் இலங்கைத் தலபுராணங்களில் நன்கு பதிவாகியுள்ளன என்பதும், அவற்றுள் சில மாற்றமடைந்து வருவதும் இவ்வாய்வின் மூலம் அறியப்படுகின்றது..

கிராமியப்பண்பாட்டு மரபுகள் காலசூழ்நிலைகளுக்கு ஏற்ற சில மாற்றங்களை உள்வாங்கிய போதிலும் கூட இன்றுவரை கிராமியப் பண்பாடுகள் மக்களது மனங்களில் நின்று நிலைத்திருப்பதையும் காணமுடிகின்றது. இன்றைய கிராமிய பண்பாட்டில் ஆகமப்பண்பாட்டு மரபுகள் கலந்து ஒன்றிலிருந்து இன்னொன்றைப் பிரிக்கமுடியாத நிலைப்பாட்டையும் இவ்வாய்வில் அவதானிக்க முடிகின்றது.

இந்துக்களின் கிராமியப் பண்பாட்டு மரபுகளை அறிவதற்கும், பேணுவதற்கும், அவற்றைப் பாதுகாத்து வைப்பதற்கும், எதிர்கால சந்ததியினருக்கு அவற்றைக் கையளிப்பதன் மூலம் அப்பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்வதற்கும், சமூக வலுவூட்டலுக்கும் இவ்வாய்வு பெரிதும் பயன்படும் எனலாம்.

**அடிக்குறிப்புகள்.**

ஈழத்துச்சிதம்பர புராணம், காரைவளச் சருக்கம், 111

ஈழத்துச்சிதம்பர புராணம், காரைவளச சருக்கம், 112.

நகுலகிரிப்புராணம், திருநகரப்படலம், 53.

ஸ்ரீகைலாஸநாத புராணம். கெசாசுர சர்மாபகாரசருக்கம்.95

ஈழத்துச்சிதம்பர புராணம் காரைவளச் சருக்கம், 79

ஈழத்துச் சிதம்பரபுராணம். காரைவளச் சருக்கம்.29

ஈழத்துச் சிதம்பர புராணம், ஐயனார் கோயில்காண் சர்க்கம்,7,8.

ஈழத்துச் சிதம்பர புராணம்,தவம்புரி சருக்கம்,32

ஸ்ரீகைலாஸநாத புராணம். தக்கன் கெர்வாப காரசர்க்கம்.70.

தட்சிணகைலாசபுராணம், ஈழமண்டலச் சருக்கம்,11

ஈழத்துச்சிதம்பர புராணம், திண்ணபுரச் சருக்கம், 47

ஈழத்துச்சிதம்பர புராணம், தவம்புரிசருக்கம், 28

ஈழத்துச்சிதம்பர புராணம், விழாவயர்சருக்கம், 31

திரிகோணாசல புராணம், குளக்கோட்ட உற்பத்திப்படலம், 68

ஸ்ரீகைலாஸநாத புராணம் கெசாசுசர்மாப காரச்சருக்கம். 84

ஈழத்துச் சிதம்பர புராணம் காரைவளச் சருக்கம்.61

திருக்கேதீச்சர புராணம், நாவலர் திருப்பணி, 06

ஈழத்துச்சிதம்பர புராணம், விழாவயர்சருக்கம், 120

ஈழத்துச்சிதம்பர புராணம், அந்தணர் பூசைபுரிச்சருக்கம், 10

ஈழத்துச்சிதம்பர புராணம், தவம்புரிசருக்கம், 101

ஈழத்துச்சிதம்பர புராணம், தவம்புரிசருக்கம், 99

ஈழத்துச்சிதம்பர புராணம், விழாவயர் சருக்கம், 155

ஈழத்துச்சிதம்பர புராணம், விழாவயர்சருக்கம், 156

ஈழத்துச் சிதம்பர புராணம் காரைவளச் சருக்கம்.70

திரிகோணாசலபுராணம், குளக்கோட்ட உற்பத்திப்படலம், 36

திருக்கரைசைப்புராணம், இலங்கைச்சருக்கம், 34

நகுலகிரிப்புராணம், திருநாட்டுப்படலம்.28

திரிகோணாசல புராணம், திருநாட்டுப் படலம்,04.

ஈழத்துச்சிதம்பரபுராணம், காரைவளச் சருக்கம்,35.

ஈழத்துச்சிதம்பரபுராணம், காரைவளச் சருக்கம்,51.

**துணைநூல்கள்.**

அப்பாச்சாமி ஐயர், கா., (1980) நகுலகிரிப் புராணம், கீரிமலைச்சிவநெறிக்கழக வெளியீடு, தெல்லிப்பழை.

இரகுபரன்.க (2009) திருக்கரசைப் புராணம், இந்துசமய கலாசார அலுவல் கள் திணைக்களம், கொழும்பு.

இராமச்சந்திரன், சு,. (1966) திருக்கேதீச்சரப் புராணம். இடைக்காடு தமிழ் மன்றம், அச்சுவேலி

இளமுருகனார், சோ,. (1972) திருத்திண்ணபுர சுந்தரேஸ்வரர் புராணம் என்னும் ஈழத்துச்சிதம்பர புராணம். ஈழத்துச் சிதம்பர தேவத்தானம், காரைநகர்.

சண்முகரத்தின ஐயர், ஆ, (1997) திரிகோணாசல புராணம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சிவசுப்பிமணிய சிவாச்சாரியார், நா,. (2010), ஸ்ரீகைலாஸநாதபுராணம், கிருஸ் னானந்த சர்மா, ஸ்ரீ, கைலாச நாதக்குருக்கள் ஞாபகார்த்த சபை. நல்லூர்.

பத்மநாதன். சி,. (1995) தக்ஷிணகைலாச புராணம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.

வைத்தீசுவரக்குருக்கள், ச.கு,. (1970) திருக் கேதீச் சரப்புராணம், திருஞானசம் பந்தர் மடாலய பரிபாலன சபை, வேலணை